முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1670

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.04.2024,** வியாழக்கிழமை

1. பேருலகம் ஞான ஆற்றல்பெற
பிரணவ சித்திமிகு ஞானியாக
சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(குரோதி வருடம் சித்திரை மாதம் 12 ம் நாள், 25.04.2024, வியாழக்கிழமை)
வரமாக ஆறுமுகன் யான் உன்னை
வையகத்தில் முழுமைபட காத்து வருகின்றேன்
3. வருகவே அரங்கன் நீ தருகின்ற தீட்சை வழி
வையகத்தார்க்கு சக்தியாக மாறி அருளுகின்றேன்
அருளவே அரங்கன் உந்தனுக்கு அனுதினம்
ஆக்கம் கூட்டி ஆக்கை நலம் சர்வபலம் தந்து மீட்கின்றேன்
4. மீட்கவே இந்த உலகமாற்றத்தை
மண்ணுலகில் உன் மார்க்கம் கொண்டே
திட்டமுடன் அற்புதம்பட நடத்த இருக்க
தேசிகன் உன் தொண்டர்கட்கே இந்த வாய்ப்பை
5. வாய்ப்பை ஞானமாக வரமாக தந்து ஆறுமுகன் யான்
வையகம் எங்கும் தர்மமாக வலம் வருகின்றேன்
ஆகவே அரங்கன் தொண்டர்படைகள்
அச்சமற தர்மத்தை தொடர்ந்து செய்து கொண்டு
6. அப்பனே முருகனே அரங்கனே என
ஆற்றல்பட ஜெபதபங்கள் செய்து கொண்டு
செய்துகொண்டு அரங்கன் பேரிலான தர்மத்தை
சேவையாக செயலாக உலகெலாம் இயக்கிவர

7. அவனியில் ஆறுமுகன் யான்
அந்த தர்மத்தில் இறங்கி
உலகமெங்கும் ஞானத் தலைமை
உருவாக்கி அற்புதம் படைப்பேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–